தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

Vol: 02	Issue: 111	4 Pages	19.11.2024	Tuesday	Price Rs. 6	Annual Subscription Rs: 1825
மலர்: 02	இதழ்: 111	4 பக்கங்கள்	19.11.2024	செவ்வாய்க்கிழமை	விலை ரூ.6	வருட சந்தா ரூ.1825



பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்

விளக்கம்:

முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.

அடுத்ததும் திமுக ஆட்சிதான் என மக்கள் உத்தரவாதம் அளித்தனர்: மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.19

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாவட்டந்தோறும் கள ஆய்வு என்று நாமக்கல்லில் அறிவித்து, கோவை, விருதுநகர் மாவட்டங்களில் நேரடி ஆய்வை மேற்கொண்ட உங்களில் ஒருவனான நான், கடந்த 14,15ம்தேதிகளில்அரியலூர்பெரம்பலூர் மாவட்டங்களில் நேரடிக் கள ஆய்வை மேற்கொண்டு, இரு மாவட்ட மக்களுக்குமான திட்டங்களை வழங்கி, கழக உடன்பிறப்புகளுடனும் கலந்தாலோசனை நடத்தியது மனதுக்குப் பெரும் நிறைவைத் தந்தது.

மக்கள் நின்று வரவேற்பளிப்பதை, இன்றைய அரசியல் களத்தில், 'ரோடு ஷோ' என்கிறார்கள். ஷோ என்றால் காட்சி எனப் பொருளாகும். நம்மைப் பொருத்தவரை, இது வெறும் காட்சியும் அல்ல, மக்கள் நமக்கு காட்சிப் பொருளுமல்ல. திராவிட மாடல் அரசின் நல்லாட்சிக்குக் கிடைக்கின்ற மகத்தான வரவேற்பு. தி.மு.க அரசின் திட்டங்களால் பயன் பெற்று வரும் மக்களின் திருவிழாக் கொண்டாட்டம்.

ஜெயங்கொண்டத்திலிருந்து அரியலூருக்கு செல்லும் வழியெங்கும் மக்கள் திரண்டு நின்றனர். உங்களில் ஒருவனான என்னைப் பார்த்ததுமே மக்கள் மகிழ்ச்சியுடன் கையசைத்து, ஆரவாரம் செய்ததுடன், "இனி எப்போதும் நம்ம ஆட்சிதான்", "திராவிட மாடல் ஆட்சி சூப்பர்.. அடுத்ததும் நாமதான்" என்றதுடன், 234 தொகுதிகளில் 200க்கு மேல் நாம் வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் நான் வலியுறுத்தி வருவதை மனதில் வைத்து "நிச்சயம் 200 ஜெயிப்போம்" என்று உற்சாகக் குரலுடன் உத்தரவாதம் அளித்தனர்.

மக்கள் அளித்த உறுதியையும், அவர்கள் காட்டுகின்ற பாசத்தையும் பார்த்து பரவசமடைந்ததுடன், மக்களுக்கான திட்டங்கள் சரியாகப் போய்ச் சேர வேண்டியதை இத்தகைய கள ஆய்வுகள் மூலம் உறுதி செய்வதன் அவசியத்தையும் உணர்ந்தேன். இரு மாவட்ட அரசுத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளையும், கழகத்தின் ஆக்கப் பணிகளையும் நிறைவு செய்து,

அரியலூர் பெரம்பலூர் மக்கள் தந்த நம்பிக்கையால் மனநிறைவுடன் நவம்பர் 15 அன்று இரவு சென்னை வந்து சேர்ந்தேன். நவம்பர் 28, 29ம் தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திற்கு செல்ல இருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரில் வந்து உடன்பிறப்புகளாம் உங்களைக்கண்டு மகிழ்வேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

காசாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் 12 பேர் பலி

காசா சிட்டி, நவ.19

காசா முனையை நிர்வகித்துவரும்ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது.

அதேவேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் இன்று வான்வழி தாக்குதல் நடத்தியது. காசா முனையில் உள்ள நசிரத் அகதிகள் முகாமை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 72 பேர் கொல்லப்பட்டதால் பதற்றம்

கெய்ரோ, நவ.19

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது. அதேவேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு காசாவின் பெய்ட் லாஹியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் டஜன் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் இந்த தாக்குதலில் 72 பேர் உயிரிழந்துள்ளதாக காசா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. பாலஸ்தீனிய குடிமை தற்காப்புப் பிரிவு, அதன் குழுக்களால் அந்தப் பகுதிக்கு செல்ல முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் டஜன் கணக்கானோர் காயமடைந்து இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே ஹிஸ்புல்லாவின் உயர்மட்ட ஊடக தொடர்பு அதிகாரி மொகமத் அபிப் மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேலிய தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக வடக்கு இஸ்ரேலில் செசாரியா பகுதியில் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவின் இல்லத்தின் மீது நேற்று வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா குடியிருப்பு கட்டிடம் மீது தற்போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வங்காளதேசத்தில் பரவும் டெங்கு காய்ச்சல்: ஒரேநாளில் 8 பேர் பலி

டாக்கா, நவ.19

வங்காளதேசத்தில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது.

டெங்குவை கட்டுப்படுத்த அந்நாட்டு சுகாதாரத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில், டெங்கு காய்ச்சலுக்கு அந்நாட்டில் நேற்று ஒரேநாளில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 994 பேருக்கு புதிதாக டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வங்காளதேசத்தில் டெங்குவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 173ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, வங்காளதேசத்தில்நடப்பு ஆண்டில்டெங்குகாய்ச்சலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 407 ஆக அதிகரித்துள்ளது.

வார விடுமுறையையொட்டி முதுமலை யானைகள் முகாமில் குவிந்த சுற்றுலா பயணிகள்

நீலகிரி, நவ.19

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகேஉள்ளமுதுமலையில்தெப்பக்காடுயானைகள்முகாம்அமைந்துள்ளது. இங்கு 28 யானைகள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், இங்குள்ள யானைகளுக்கு காலை மாலை என இருவேளைகளிலும் ஊட்டச்சத்து உணவு வழங்குவது வழக்கம். யானைகள் அணிவகுத்து நின்று உணவு உட்கொள்வதை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருகின்றனர்.

இந்த நிலையில் இன்றைய தினம் வார விடுமுறையை முன்னிட்டு முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

அங்கு ஒவ்வொரு யானைக்கும் அதன் பாகன்கள் ஊட்டச்சத்து உணவுகளை வழங்குவதையும், யானைகள் செய்யும் குறும்புகளையும் சுற்றுலா பயணிகள் கூடி நின்று உற்சாகத்துடன் கண்டு களித்தனர்.

மதுரை ஆலத்தூர் ஊராட்சி சிச்சிலுப்பை கிராமத்தில் ஸ்ரீ அய்யனார் கோவில் கும்பாபிஷேக விழா

மதுரை, நவ.19

மதுரை ஆலத்தூர் ஊராட்சி சிச்சிலுப்பை கிராமத்தில் ஸ்ரீ அய்யனார் கோவில் கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக்கடலில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் தீர்த்தமும், அழகர் கோவில் ராக்காயி கோவில் தீர்த்தமும், மதுரை மீனாட்சி குடி கொண்டுள்ள வைகை ஆற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தங்களையும் கொண்டு ஊர் கிராம மக்கள் மற்றும்ழ் நூற்றுக்கணக்கானவர்கள் முன்னிலையில் அய்யனார் கோவில் கும்பத்திற்கு புனித நீரை ஊற்றி, பக்தர்கள் கோசமிட்டும், கொட்டு சத்தம் முழங்க கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக, 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவின் ஏற்பாடுகளை ஸ்ரீ அய்யனார் கோவில் நிர்வாகிகள் ஜோதிமணி, ஆனந்த், கிருபா,மணி, மூர்த்தி,விஜய்,வேல்,ராஜேஸ்,ஓம் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை வெகு சிறப்பாக செய்திருந்தனர்.

புரட்சி பாரதம் கட்சி சார்பில் வீரபாண்டி செல்வம் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட செயலாளர் மாவட்ட துணை செயலாளர் சார்பில் கலெக்டரிடம் புகார் மனு

திருப்பூர், நவ.19

புரட்சி பாரதம் கட்சி சார்பில் வீரபாண்டி செல்வம் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட செயலாளர் அ.எபிநேசன் மாவட்ட துணை செயலாளர் சார்பில் மாவட்ட ஆட்சியர் சந்தித்து புகார் மனு கொடுக்கப்பட்டது

திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மாநகராட்சி வீரபாண்டி பழவஞ்சி பாளையம் பகுதிகளில் உள்ள தமிழ் நாடு அரசு வீட்டு வசதி வாரியத்தில் அடுக்குமாடி குடியிருப்பு வீடு இல்லாதவர் ஏழை எளிய மக்

களுக்கு வழங்கப்பட்ட வீடு ஆனால் ஒரு சில வீடு பெற்று கொண்டு வாடகைக்கு விட்டுள்ளார்கள்ஒரு சிலர் பூட்டி வைக்கப்பட்டுள்ளது சரியான பயனாளிகளுக்கு வீடு வழங்கப்படவில்லை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து வீட்டு இல்லாத இல்லாதவருக்கு பெற்று தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புரட்சி பாரத கட்சிசார்பாக புகார் மனு அளித்துள்ளனர்

மனைவி வர மறுப்பு: மாமியாரை தாக்கிய மருமகன்

திருப்பூர், நவ.19

திருப்பூர் சின்னாண்டி பாளையத்தை சேர்ந்தவர் பெருமாள்தாய். இவரது மகள் இசக்கியம்மாள். இவருக்கும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த சின்னதுரை என்பவருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். சின்னத்துரை தினமும் மது குடித்துவிட்டு வந்து மனைவி இசக்கியம்மாளை அடித்து உதைத்து துன்புறுத்தியதாக தெரிகிறது.

இதனால் இசக்கியம்மாள் திருப்பூரில் உள்ள தனது தாய் வீட்டிற்கு வந்து விட்டார். இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு மனைவியை அழைத்து செல்வதற்காக சின்னத்துரை வந்துள்ளார். அப்போது மனைவி குடும்பம் நடத்த வர மறுத்ததாக தெரிகிறது. இதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனைவியை தாக்கியுள்ளார்.

மேலும் இதனை தட்டிக் கேட்ட பெருமாள்தாயை தாக்கியதோடு சுவரில் பிடித்து தள்ளினார். இதனால் அவரின் மண்டை உடைந்ததில் ரத்தம் பீறிட்டு வெளியேறியது. இதையடுத்து சின்னத்துரை அங்கிருந்து தப்பிச்சென்று விட்டார். பின்னர் படுகாயம் அடைந்த பெருமாள் தாயை அக்கம், பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து திருப்பூர் மத்திய போலீசார் வழக்குப்பதிவு செய்து சின்னத்துரையை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேகமலை அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

தேனி, நவ.19

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே மேகமலை அருவி உள்ளது. இந்த அருவியில் குளிப்பதற்காக தேனி மட்டுமின்றி மதுரை, திண்டுக்கல், திருச்சி உள்பட வெளிமாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்த நிலையில், தேனி மாவட்டம் மேகமலை வனப்பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. அபாய அளவை தாண்டி நீர்வரத்து உள்ளதால் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

நீர்வரத்தை வனத்துறையினர் கண்காணித்து வருகின்றனர். நீர்வரத்து சீரான பிறகு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். திடீரென விதிக்கப்பட்ட தடையால் அருவிக்கு குளிக்க வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

வந்தே பாரத் ரெயிலில் வழங்கப்பட்ட உணவில் வண்டு: உணவு விநியோகம் செய்த நிறுவனத்துக்கு ரூ.50,000 அபராதம்

சென்னை, நவ.19

நெல்லையில் இருந்து சென்னைக்கு தினமும் காலை 6 மணிக்கு வந்தே பாரத் ரெயில் புறப்பட்டு செல்கிறது. இந்த ரெயிலில்பயணிகளுக்குஉணவு வசதியும் வழங்கப்படுகிறது. இந்த நிலையில், நேற்று காலை வழக்கம் போல் வந்தே பாரத் ரெயில் புறப்பட்டுச் சென்றது. அதில் நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியை சேர்ந்த முருகன் மற்றும் பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பகுதியை சேர்ந்த சுடலைக்கண்ணு ஆகிய இருவரும் திருச்சி செல்வதற்காக பயணம் செய்துள்ளனர்.

அப்போது ரெயில்வே ஊழியர்கள், காலை நேர உணவு பொட்டலத்தை பயணிகளுக்கு வழங்கினார்கள். அதில் இட்லி, வடை, சாம்பார் ஆகியவை இருந்தது.

அதை பிரித்து பயணிகள் சாப்பிடத் தொடங்கினார்கள். அப்போது சாம்பாரில் சிறிய அளவில் 3 வண்டுகள் இருப்பதை பயணி முருகன் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து ரெயிலில் இருந்த ரெயில்வே அதிகாரிகளை அழைத்து புகார் செய்தார்.

அதைக்கண்ட அதிகாரிகள், சாம்பாரில் காணப்படுவது வண்டு இல்லை எனவும், இது சீரகம் மசாலா என விளக்கம் அளித்து சமாளித்து உள்ளனர். ஆனால் சீரகம் மசாலாவில் எப்படி தலை மற்றும் கால்கள் இருக்கும் என பயணிகள் அதிகாரியிடம் கேள்வி கேட்டுள்ளனர். அதிகாரிகள் மற்றும் பயணிகள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அங்கிருந்த சக பயணிகள் செல்போனில் வீடியோவாக பதிவு செய்து உள்ளனர். அந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த நிலையில், நெல்லை சென்னை வந்தே பாரத் ரெயிலில் வழங்கப்பட்ட உணவில் வண்டுகள் இருந்த விவகாரத்தைத் தொடர்ந்து, உணவு விநியோகம் செய்த பிருந்தாவன் புட் புராடக்ட்ஸ் நிறுவனத்திற்கு ரூ.50,000 அபராதம் விதித்து தெற்கு ரெயில்வே நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட பயணியிடம் மன்னிப்பு கேட்கப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளுந்தூர்பேட்டையில் வாக்குச்சாவடி முகவர்களை நியமிப்பது தொடர்பாக திமுகவினரிடையே கைகலப்பு

உளுந்தூர்பேட்டை, நவ.19

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 300க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு திமுக சார்பில் முகவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அதில் உளுந்தூர்பேட்டை தொகுதி எம்.எல்.ஏ. மணிக்கண்ணன் ஆதரவாளர்களையும், ஒன்றிய செயலாளர்கள் ஆதரவாளர்களையும் வாக்குச்சாவடி முகவர்களாக நியமனம் செய்வதில் திமுகவினரிடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

இந்த நிலையில் ஒன்றிய செயலாளர்கள் அவர்களது ஆதரவாளர்களை அதிக அளவில் வாக்குச்சாவடி முகவர்களாக நியமித்துள்ளதாகவும், எம்.எல்.ஏ. மணிக்கண்ணன் ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டு வந்தது. இதனால் அவர்களுக்கிடையே கோஷ்டி பூசல் ஏற்படும் நிலை இருந்து வந்தது.

இதுதொடர்பாக இரு தரப்பினரையும் அழைத்து சுமுகமாக பேசி முடிவு செய்ய கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ. நேற்று மதியம் உளுந்தூர்பேட்டை பயணியர் விடுதிக்கு வந்தார். இதையடுத்து அங்கு மணிக்கண்ணன் எம்.எல்.ஏ.வின் ஆதரவாளர்களும், ஒன்றிய செயலாளர்களின் ஆதரவாளர்களும் குவிந்தனர். அப்போது எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன், மணிக்கண்ணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் பயணியர் விடுதியில் உள்ள அறையில் பேசிக்கொண்டிருந்தபோது வெளியே இருந்த கட்சியினரிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் இருதரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அது கைகலப்பாக மாறி ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இதுபற்றி அறிந்த எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன், மணிக்கண்ணன் ஆகியோர் வெளியே வந்து கட்சியினரிடம் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானப்படுத்த முயன்றனர். இருப்பினும் அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

இதற்கிடையே இது பற்றி தகவல் அறிந்த உளுந்தூர்பேட்டை போலீசார் அங்கு விரைந்து வந்து, வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து போக செய்தனர். இருப்பினும் அங்கு தி.மு.க.வினர் குவிந்து வருவதால், 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். எம்.எல்.ஏ.க்கள் முன்னிலையில் தி.மு.க.வினரிடையே ஏற்பட்ட கைகலப்பால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

சரக்கு வாகனம் மீது லாரி மோதி விபத்து: 3 பேர் பலி

நாமக்கல், நவ.19

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா, வெங்கரையை சேர்ந்த ஆறுமுகம் மகன் ரமேஷ். ஆட்டோ டிரைவரான இவர், நேற்று சரக்கு வாகனத்தில் மணவறை அலங்கார பொருட்களை (டெக்கரேஷன்) ஈரோடு அருகே உள்ள ஒரு திருமண மண்டபத்தில் இறக்கிவிட்டு அங்கிருந்து டெக்கரேசன் வேலையாட்களுடன் நள்ளிரவு 2 மணி அளவில் கபிலர்மலைக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்.

அப்போது பரமத்தியில் இருந்து ஜேடர்பாளையம் நோக்கி எதிரே வந்த லாரியும், சரக்கு வாகனமும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக் கொண்டன.

இதில் சரக்கு வாகனம் அப்பளம்போல் நொறுங்கியது.

இந்த விபத்தில் டெக்கரேசன் வேலைக்கு வந்த சக்திநாதன்(18),சிவா(19), பூமிஷ்(20) ஆகியோர் பரிதாபமாக இறந்தனர். படுகாயம் அடைந்த டிரைவர் ரமேஷ், சாமிநாதன் ஆகியோர் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விருதுநகர்: ரெயில் முன் பாய்ந்து 2 பெண்கள் தற்கொலை

விருதுநகர், நவ.19

சிவகாசி அருகே திருத்தங்கல் சுப்பிரமணியர் கோவில் தெருவை சேர்ந்தவர் கருப்பசாமி. இவருடைய மனைவி பேச்சியம்மாள். கருப்பசாமியும், மகனும் இறந்த நிலையில் பேச்சியம்மாள் மனவேதனையில் இருந்தாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ஆலமரத்துப்பட்டி ரெயில்வே கேட் அருகே மயிலாடுதுறை செங்கோட்டை விரைவு ரெயில் முன்பு பாய்ந்து பேச்சியம்மாள் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை வரை செல்லும் விரைவு ரெயில் சாத்தூர் ரெயில் நிலையத்தை கடக்கும் போது 55 வயது மதிக்கத்தக்க பெண் ரெயில் முன் பாய்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்து வந்த ரெயில்வே போலீசார் அந்த பெண்ணின் உடலை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் அவர் சாத்தூர் குருலிங்கபுரத்தை சேர்ந்த சுந்தரி (56) என்பது தெரிய வந்தது.

இதையடுத்து சுந்தரியின் உடலை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் இன்று குடமுழுக்கு விழா கோலாகலம்: திரளான பக்தர்கள் தரிசனம்

சென்னை, நவ.19

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற திருக்கோவில்களில் இன்றைய தினம் குடமுழுக்கு விழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த ராயபட்டியில் அமைந்துள்ள சக்தி விநாயகர் மற்றும் சின்ன மாரியம்மன் கோவிலில், தாரை தப்பட்டை முழங்க கோபுர கலசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட புனித நீர், வேத மந்திரங்கள் முழங்க கோபுரத்தின் மீது ஊற்றப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது.

அதே போல், பழனி தண்டாயுதபாணி கோவிலின் உப கோவிலான வேணுகோபால சாமி கோவிலில், குடமுழுக்கு விழாவை தொடர்ந்து தீபாராதனை, நான்மறை ஓதுதல், நாலாயிர திவ்ய பிரபந்தம் பாராயணம் நடைபெற்றது. பக்தர்களுக்கு அன்னதானமும், தீர்த்த பிரசாதமும் வழங்கப்பட்டது.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகா மேல் அரசம்பட்டு கிராமத்தில் புதிதாக எழுந்தருளியுள்ள காளியம்மன் கோவிலின் அஷ்டபந்தன மகா குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம் காலிங்கராயன் பாளையம் பகுதியில் அமைந்துள்ள நூற்றாண்டுகள் பழமையான மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழாவையொட்டி 'தென்னகத்தின் காசி' என்று அழைக்கப்படும் பவானி கூடுதுறை காவிரியில் புனித நீராடி 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் தீர்த்தக் குடம் எடுத்து ஊர் வலமாக கோவிலை வந்தடைந்தனர். இந்த குடமுழுக்கு விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தண்ணீர் திறப்பு எதிரொலி.. வைகை அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென சரிவு

தேனி, நவ.19

வைகை அணையில் இருந்து மதுரை, சிவகங்கை மாவட்ட முதல்போக மற்றும் ஒருபோக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அதேபோல் ராமநாதபுரம் மாவட்டத்தின் 3ம் பூர்வீக பாசனப்பகுதி நிலங்களுக்கு தமிழக அரசின் உத்தரவுப்படி கடந்த 10ந்தேதி முதல் வைகை அணையில் இருந்து தண்ணீர் கூடுதலாக திறக்கப்பட்டது. அதன்படி தற்போது அணையில் இருந்து சராசரியாக வினாடிக்கு 3 ஆயிரம் கன அடிக்கும் அதிகமாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் தேனி மாவட்டத்திலும், வைகை அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கடந்த ஒரு வாரமாக பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால் வைகை அணைக்கான நீர் வரத்து மிகவும் குறைந்தது. அதேநேரத்தில் வைகை அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென சரிந்து வருகிறது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அணையின் நீர்மட்டம் 5 அடி சரிந்துள்ளது. அதாவது தற்போது அணையின் நீர்மட்டம் 60 அடியாக குறைந்துள்ளது. வைகைஅணைநீர்மட்டம் சரிந்து வருவதால் 5 மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.

நிறைவடையும் பராமரிப்பு பணி: பழனி முருகன் கோவிலில் விரைவில் ரோப்கார் சேவை

பழனி, நவ.19

பழனி ரோப்கார் நிலையத்தில் இந்த ஆண்டுக்கான வருடாந்திர பராமரிப்பு பணி கடந்த மாதம் 7ந்தேதி தொடங்கியது. இதையொட்டி கம்பி வடம், பெட்டிகள், எந்திரங்கள், பற்சக்கரங்கள் உள்ளிட்டவை கழற்றப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டது. மேலும் 'சாப்ட்'கள் தேய்மானம் அடைந்தால் கடந்த 5ந்தேதி புதிய 'சாப்ட்' பொருத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து கடந்த 9ந்தேதி ரோப்காரில் புதிய கம்பிவடம் பொருத்தும் பணி நடந்தது. இந்தநிலையில் நேற்று ரோப்காரில் புதிய பெட்டிகள் பொருத்தும் பணி நடைபெற்றது. முன்னதாக பெட்டிகள் சுத்தம் செய்யப்பட்டு கம்பிவடத்துடன் பொருத்தப்பட்டது. வருடாந்திர பராமரிப்பு பணி இறுதி கட்டத்தை எட்டி உள்ளதால் ஓரிரு நாட்களில் சேவை தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி அதிகாரிகள் கூறும்போது, ரோப்கார் பராமரிப்பு பணி முடியும் தருவாயில் உள்ளது. அதாவது ரோப் பெட்டிகள் நேற்று பொருத்தப்பட்டது. அதையடுத்து பெட்டிகளில் பஞ்சாமிர்தம் வைத்து இயக்கி சோதனை செய்யப்படும். இறுதியாக சோதனை ஓட்டம் நடைபெறும்.அதுமுடிந்தவுடன் சிறப்பு பூஜை செய்யப்பட்டு பக்தர்களின் வசதிக்காக ரோப்கார் சேவை தொடங்கும் என்றனர்.

மின்சார ரெயில் சேவை ரத்து; தாம்பரத்தில் இருந்து 50 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, நவ.19

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தாம்பரம் ரெயில் நிலையத்தில் இன்று (ஞாயிற்றுக் கிழமை) காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால்,

காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தில் இருந்து தாம்பரம் செல்லும் மின்சார ரெயில்கள் பல்லாவரம் ரெயில் நிலையம் வரை மட்டுமே இயக்கப்படும் என தென்னக ரயில்வேஅறிவித்துள்ளது.

எனவே, அவ்வழித்தடத்தில் பயணம் செய்யும் பயணிகள் நலன் கருதி மாநகர போக்குவரத்துக் கழகம் தற்போது இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக தாம்பரத்தில் இருந்து பல்லாவரம் பஸ் நிலையத்திற்கு 10 பஸ்கள், தியாகராயநகர் பஸ் நிலையத்திற்கு 20 பஸ்கள் மற்றும் பிராட்வே பஸ் நிலையத்திற்கு 20 பஸ்கள் என மொத்தம் 50 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சேலம்: சிறுமியை கர்ப்பமாக்கிய வாலிபர் கைது

சேலம், நவ.19

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள சிறுவாச்சூர் பகுதியைச் சேர்ந்தவர் சந்திரன். இவருடைய மகன் குமரேசன் (வயது 30). சரக்கு வேன் டிரைவரான இவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் தாலுகா மலைவேப்பன்குட்டை பகுதியை சேர்ந்த சிறுமியை திருமணம் செய்துள்ளார். அக்கம்பக்கத்தினர் யாருக்கும் தெரியாமல் குமரேசன் அந்த சிறுமியுடன் குடும்பம் நடத்தி வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அந்த சிறுமி கர்ப்பம் தரித்தார். இந்தநிலையில் அந்த சிறுமியை பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர்.

அங்கு அவர் 17 வயது மட்டுமே ஆன சிறுமி என்பதால் இது தொடர்பாக டாக்டர்கள் ஆத்தூர் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் குழந்தை திருமணம் செய்து சிறுமியை கர்ப்பமாக்கியதாக குமரேசன் உட்பட 5 பேர் மீது குழந்தை திருமண தடை சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஓ.ராஜா விடுதலையை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்: கே.பாலகிருஷ்ணன் பேட்டி

மதுரை, நவ.19

திருமங்கலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மதுரை புறநகர் 24 வது மாவட்ட மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் அக்கட்சியின், மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசினார். மதுரை எம்.பி. வெங்கடேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். அதன் பின்னர் நிருபர்களிடம் பாலகிருஷ்ணன் கூறியதாவது:

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் சகோதரர் ஓ.ராஜா உள்பட 6 பேர், பூசாரி தற்கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு இருப்பது மிகுந்த குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளது. அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும். நீதி கிடைக்க உரிய விசாரணை நடத்த வேண்டும்.

சாய்நாதபுரத்தில் வேதா நீட் அகாடமி விஜடி துணைத் தலைவர் டாக்டர் ஜி.வி. செல்வம் திறந்து வைத்தார்

வேலூர், நவ 19

கிராமப்புற அரசு பள்ளியில் பயின்று வரும் மாணவர்களுக்கு நீட் பயிற்சி மையம் அவசியம் தேவை என வேதா அகாடமியை திறந்து வைத்துவிஜடி துனைத் தலைவர் டாக்டர் ஜி.வி. செல்வம் கூறினார் வேலூர் சாய்நாதபுரத்தில் வேதா நீட் அகாடமி திறப்பு விழா நடைபெற்றது டாக்டர் ஜி.வி.செல்வம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வேதா நீட் அகாடமியை திறந்து வைத்தார் பின்னர் குத்து விளக்கேற்றி வைத்து விழாவில் அவர் பேசுகையில், நீட் என்றாலே நீச்சல் அடிப்பது தான் ஒருவர் திறமையில் பின் தங்கி இருந்தாலும் ஒவ்வொரு மாணவரையும் எப்படி தயார் படுத்துவது எனப் பார்த்து பயிற்சி தர வேண்டும் ஒரே நேரத்தில் அதிகமானவர்களை சேர்த்து பயிற்சி பெறுவதை காட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாக செய்யுங்கள் அதில் வெற்றியை பெறலாம் குறைந்த மாணவர்களை சேர்த்து அதில் 90 சதவீதம் எடுத்து சாதிப்பது பின்னர் அந்த சாதனையை ஒட்டி அதிக அளவில் மாணவர்களை சேர்த்து மேலும் வளர்ச்சி பெறலாம் மாணவர்களுக்கு மோட்டிவேஷன் பயிற்சி அவசியம் தேவை அதை நீங்கள் தர வேண்டும் கிராமப் புற மாணவர்களுக்கு இப்படி ஒரு பயிற்சி கட்டாயம் தேவை அவர்கள் இந்த பயிற்சி மையத்தை பயன்படுத்தி மேலே வரலாம் இப்படிப்பட்ட பயிற்சி மையங்கள் மாணவர்களுக்கு பெரிதும் உதவும் இதில் பெரும் வெற்றி பெற உங்களை வாழ்த்துகிறேன் என விஜடி துணைத் தலைவர் டாக்டர் ஜி.வி. செல்வம் குறிப்பிட்டார் விழாவில் சிறப்பு விருந்தினராக வேலூர் வள்ளல் நா. கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் டி. சிவக்குமார் மற்றும் துரைராஜ் டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் டி. சிவராஜ் வேலூர் மாநகர் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்க தலைவர் பி. பூமிநாதன் மற்றும் அசோக் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் விழாவிற்கு வந்தவர்களை வேதா அகாடமியின் சிஇஓ ப. ஜெகதீஸ்வரன் அனைவரையும் வரவேற்றார் அகடமியின் சிஏஓ டி.சந்திரசேகர் இறுதியில் நன்றி கூறினார்.

சேலம் ஸ்ரீ ராஜ கணபதி முகூர்த்தகால் விழா அமைச்சர் பங்கேற்பு

சேலம், நவ.19

சேலம் முதல் அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜ கணபதி திருக்கோயில் மண்டபம் சுபமுகூர்த்தகால் விழா திருக்கோயில் வளாகத்தில் நடைப்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் அறங்காவலர்கள் குழுத்தலைவர் சோனா வள்ளியப்பா, அறங்காவலர்கள், பங்கேற்றனர் தொடர்ந்து திருக்கோயில் மண்டபம் சுபமுகூர்த்தகால் விழா நடைப்பெற்றது. பின்னர் அனைத்து பக்கதர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த பணியானது சோனா கல்வி குழுமத்தின் தலைவர் வள்ளியப்பா தனது சொந்த செலவில் ரூபாய் 24.75 லட்சம் மதிப்பிட்டில் அரசு அனுமதி பெற்று திருப்பணிகள் துவக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேசிய அறங்காவலர்கள் குழுத்தலைவர் சோனா வள்ளியப்பா ஸ்ரீ ராஜ கணபதி திருக்கோயில் மண்டபம் சுபமுகூர்த்த கால் விழா சிறப்பாக நடைப்பெற்றது. மேலும் இந்த பணிகளை விரைந்து முடிக்க முழுமுயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த நிகழ்வில் பங்கேற்ற தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜேந்திரன்க்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்வில் அரசு அலுவலர்கள், அறங்காவலர்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள், அர்ச்சகர்கள், சோனா கல்வி குழுமத்தின் முதல்வர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா

புதுக்கோட்டை, நவ.19

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத் துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட கலெக்டர் மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள், பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கூட்டுறவுத் துறையின் மூலம் மகளிர்சுய உதவிக் குழுக் கடன், பயிர் கடன், நகைக் கடன், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைத்து, மகளிர்சுய உதவிகுழுக் கடன், கே.சி.சி பயிர் கடன்கள், கூட்டுப் பொறுப்பு குழு பயிர் கடன், கைம்பெண்கள் கடன், மாற்றுத் திறனாளிகள் கடன் உள்ளிட்ட கடனுதவிகள் 721 பயனாளிகளுக்கு ரூ.5.02 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 197 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் பயிர் கடன், கே.சி.சி. யுர் கடன், நகைக்கடன், கூட்டுப் பொறுப்புக் குழு கடன், மாற்றுத் திறனாளிகள் கடன், சுய உதவிக்குழுக் கடன்கள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கைம்பெண்கள் கடன், மத்திய கால முதலீட்டு கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், பயிர் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, கூட்டுறவுத் துறையின் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர்எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்கள், மகளிர்சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்குதல் உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி இன்றைய தினம் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், கூட்டுறவு கடன் சங்கங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்காற்றி வருவதன் மூலம் பல்வேறு வகையான கடன் உதவிகள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு அதிக அளவிலான கடனுதவிகளை வழங்கி தமிழகம் சிறந்து விளங்குகிறது. எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயனடையும் வகையில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாக கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

மதுரை விமான நிலைய விரிவாக்கத்திற்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்: போலீசார் குவிப்பு

மதுரை, நவ.19

மதுரை விமான நிலைய விரிவாக்க பணிகளுக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சின்னஉடைப்பு கிராமமக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாநகராட்சி எல்லைக்குள் மூன்று சென்ட் இடம் மற்றும் வீடு கட்டி தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை நிலம் மற்றும் வீடுகளை வழங்க மாட்டோம் என்று கூறி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நிலம் கையகப்படுத்துவதற்காக சின்ன உடைப்பு கிராமத்திற்கு இன்று அதிகாரிகள் வருகை தருகின்றனர். இதன் காரணமாக சின்ன உடைப்பு கிராமத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நிலம் கையகப்படுத்த அதிகாரிகள் வருவதைக் கண்டித்து மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் மீது ஏறி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருநங்கைக்கு பாலியல் தொந்தரவு; போலீஸ்காரர் பணிநீக்கம்

தஞ்சாவூர், நவ.19

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் போலீஸ் நிலையத்தில் போலீஸ்காரராக ஆர்.வினோத் என்பவர் பணியாற்றி வந்தார். இவர் கடந்த ஆண்டு (2023) அய்யம்பேட்டை போலீஸ் நிலையத்தில் பணியாற்றியபோது, ஒரு கிராமத்தை சேர்ந்த திருநங்கையின் வீட்டிற்குள் இரவில் அத்துமீறி நுழைந்து திருநங்கைக்கு பாலியல் ரீதியில் தொந்தரவு செய்ததாக போலீஸ்காரர் வினோத் மீது புகார் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து போலீஸ்காரர் வினோத் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் துறை ரீதியில் விசாரணை நடந்து வந்தது. இந்த விசாரணையில், போலீஸ்காரர் வினோத் சம்பந்தப்பட்ட திருநங்கையை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்தது உண்மை தான் என்பது தெரிய வந்தது.

இதையடுத்து தற்போது திருவோணம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றிய போலீஸ்காரர் ஆர்.வினோத்தை பணியில் இருந்து விடுவித்து தஞ்சைமாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆஷிஷ் ராவத் உத்தரவிட்டுள்ளார்.

திருநங்கையை பாலியல் தொந்தரவு செய்த போலீஸ்காரர் வினோத் பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட சம்பவம் போலீசார் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விமான நிலைய விரிவாக்கம்: போராட்டம் தற்காலிக வாபஸ்

மதுரை, நவ.19

மதுரை விமான நிலையத்தில் விரிவாக்கப்பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இதற்காக, அந்த பகுதியை சுற்றி உள்ள கிராம மக்களிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது. இந்த நிலையில்இடம்கொடுத்த சின்ன உடைப்பு கிராம மக்கள் மாநகராட்சி எல்கைக்குள் தங்களுக்கு 3 சென்ட் இடம் மற்றும் வீடு கட்டி தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

இதனை தொடர்ந்து சின்னஉடைப்பு கிராமமக்களுடன் வருவாய் துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் இன்று பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இதில் உடன்பாடு ஏற்படாத நிலையில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் நிலம் கையகப்படுத்த வந்த அதிகாரிகளை கண்டித்து மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் மீது ஏறிபொதுமக்கள்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், சின்ன உடைப்பு பகுதியில் விமான நிலைய விரிவாக்கத்துக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு தெரிவித்து நடந்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. வீடுகளை காலி செய்ய 6 நாட்கள் (ஒருவாரம்) அவகாசம் அளித்ததை அடுத்து போராட்டம் தற்காலிக வாபஸ் பெறப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு நிலம் கையகப்படுத்தினால் பணம் மட்டுமே கொடுக்க முடியும்: மாற்று இடம் கொடுக்க முடியாது என்று மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தணி முருகன் கோவிலில் சிங்கப்பூர் உள்துறை மந்திரி சண்முகம் சாமி தரிசனம்

சென்னை, நவ.19

தமிழ் கடவுள் முருகப் பெருமானின் 5ம் படை வீடாக திருத்தணி முருகன் கோவில் திகழ்கிறது. இந்த கோவிலுக்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து தரிசனம் செய்து விட்டு செல்வது வழக்கம். கிருத்திகை, விடுமுறை தினம் மற்றும் விசேஷ நாட்களில் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படும்.

அந்தவகையில், கார்த்திகை முதல்நாள் மற்றும் கிருத்திகையையொட்டி திருத்தணி முருகன் கோவிலில் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். மேலும் மூலவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் பொது வழியில் பக்தர்கள் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

கிருத்திகையையொட்டி சிங்கப்பூர் உள்துறை மந்திரி சண்முகம் பெங்களூருவில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் திருத்தணியில் உள்ள பிரபல தனியார் கல்லூரி வளாகத்திற்கு வந்தார். பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்டு திருத்தணி முருகன் கோவிலுக்கு வந்தார். கோவில் இணை ஆணையர் ரமணி, அறங்காவலர் சுரேஷ்பாபு ஆகியோர் அவரை வரவேற்றனர்.

பின்னர் கோவிலுக்குள் சென்ற சிங்கப்பூர் மந்திரி ஆபத்சகாய விநாயகர், சண்முகர், மூலவர், வள்ளி, தெய்வானை சன்னதிகளுக்கு சென்று அர்ச்சனை செய்து வழிபட்டார்.

பின்னர் கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு பூமாலை மற்றும் விபூதி பிரசாதங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, காரில் கல்லூரிக்கு வந்து, அங்கிருந்து ஹெலிகாப்டரில் திருப்பதிக்கு புறப்பட்டு சென்றார்.

கஸ்தூரி கைது பழிவாங்கும் நடவடிக்கை: சீமான்



சென்னை, நவ.19

சென்னையில் கடந்த 3ந் தேதி பிராமணர் சமூகத்தினர் சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் நடிகை கஸ்தூரி பேசிய உரை, மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அந்த நிகழ்ச்சியில் அவர் தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதைத்தொடர்ந்து அவர் தனது கருத்துக்கு வருத்தம் தெரிவித்தார்.

இருப்பினும், நடிகை கஸ்தூரிக்கு எதிராக சென்னை உள்ளிட்ட பல இடங்களில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதைத்தொடர்ந்து அவர் முன்ஜாமீன் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தள்ளுபடி செய்து கடந்த 14ந் தேதி உத்தரவிட்டார்.

முன்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து அவர் தலைமறைவானார். அவரை கைது செய்ய போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டனர். இதற்காக தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

இந்த நிலையில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே உள்ள பப்பலக்குடா பகுதியில் சினிமா தயாரிப்பாளர் ஹரிகிருஷ்ணனின் வீட்டில் பதுங்கி இருந்த கஸ்தூரியை தனிப்படை போலீசார் நேற்று கைது செய்தனர். இன்று எழும்பூர் கோர்ட்டில் கஸ்தூரி ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் கஸ்தூரி கைது, பழிவாங்கும் நடவடிக்கை என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பேட்டியளித்த அவர், "கஸ்தூரி கைது செய்யப்பட்டது பழிவாங்கும் நடவடிக்கை. கஸ்தூரியை மட்டும்தனிப்படைஅமைத்து கைது செய்தது உள்நோக்கம் கொண்டது" என்று கூறினார்.

விளக்கு ஏற்றியபோது சேலையில் தீப்பிடித்து பெண் பலி

சென்னை, நவ.19

சென்னை தியாகராயநகர், டாக்டர் நாயர் சாலைப் பகுதியைச் சேர்ந்தவர் முருகப்பன் (60 வயது). இவர் கப்பலுக்கு தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை வைத்து நடத்தி வருகிறார். இவருடைய மனைவி ஆண்டாள் (58 வயது). இவர் கடந்த 4ந்தேதி வீட்டில் அகல் விளக்குகளில் தீபம் ஏற்றினார். அப்போது ஒரு அகல் விளக்கு மீது அவரது சேலை பட்டு சேலையில் தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

இதை ஆண்டாள் கவனிக்காததால் தீ, விறுவிறுவென அவர் சேலை முழுவதும் பிடித்து எரிந்தது. அதிர்ச்சியடைந்த அவர் வலியால் கத்தி கூச்சலிட்டார். அப்போது, அங்கிருந்தவர்கள் ஆண்டாளை மீட்டனர். பலத்த காயமடைந்த அவரை, அந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை பெற்று வந்த ஆண்டாள் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பின்னர், அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த சம்பவம் குறித்து பாண்டி பஜார் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்காசி: திருமண விழாவையொட்டி நடந்த மதுவிருந்தில் தகராறு; ஒருவர் வெட்டிக் கொலை

தென்காசி, நவ.19

தென்காசி மாவட்டம் குற்றாலம் அருகே, காசிமேஜர் புரம் பகுதியைச் சேர்ந்த சூர்யா என்பவருக்கு இன்று திருமணம் நடைபெற இருந்த நிலையில், நேற்றிரவு நண்பர்களுக்கு மது விருந்து அளிக்கப்பட்டுள்ளது. அப்போது, முனியா கணேசன் என்பவருக்கும், பட்டமுத்து என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்பாக மாறியுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த முனியா கணேசன், அரிவாளால் பட்டமுத்துவை வெட்டியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், தாக்குதலை தடுக்க வந்த பட்டமுத்துவின் நண்பர் அருண்குமார் என்பவருக்கும் அரிவாள் வெட்டு விழுந்துள்ளது. இது தொடர்பான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார், தலைமறைவாக உள்ள முனியா கணேசன் உள்பட 3 பேரை தேடி வருகின்றனர்.

வ.உ.சி.யின் புகழ் எப்போதும் மறக்கடிக்க முடியாது: தஞ்சையில் நடந்த நூல் அறிமுக விழாவில் பேச்சு

தஞ்சாவூர், நவ.19

தஞ்சை பெசண்ட் அரங்கில் மக்கள் சிந்தனை பேரவை சார்பில் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன (எம்.ஐ.டி.எஸ்.) பேராசிரியர் முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய "சுதேசி ஸ்டீம்" என்கிற ஆங்கில நூல் அறிமுக விழா நடந்தது. விழாவிற்கு மக்கள் சிந்தனைப் பேரவை துணைத் தலைவர் பேராசிரியர் விஜயராமலிங்கம் தலைமை தாங்கினார். பேரவை பொதுக்குழு உறுப்பினர் புலவர் மா.கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். விழாவில் முரசொலி எம்.பி. கலந்து கொண்டு நூலை அறிமுகம் செய்து பேசினார். விழாவில் நூல் ஆசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி பேசியதாவது:

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மட்டுமல்லாமல், சமூக விடுதலை போராட்டத்திலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. மண்டல் கமிஷன் அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு தந்தை பெரியாரைப் பற்றி வடநாட்டில் ஆங்கில நூல்கள் மூலம் ஏராளமானோர் அறிந்து கொள்ளத் தொடங்கினர். இதன் மூலம், தமிழ்நாட்டில் 70 ஆண்டுகளுக்கு முன்பே இட ஒதுக்கீடு தொடர்பான சட்டங்கள் கொண்டு வரப்பட்டது உள்ளிட்ட கருத்துகளை வடநாட்டினர் பரவலாக அறிந்தனர்.

ஆனால், சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு மறக்கடிக்கப்பட்டு, வடநாட்டினர்தான் அதிக அளவில் பங்களிப்பு செய்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். இந்தக் கருத்தை உடைக்கும் விதமாக வ.உ.சி. தொடங்கிய கப்பல் நிறுவனம் குறித்து எழுத வேண்டும் என்ற அடிப்படையில் சுதேசி ஸ்டீம் என்கிற ஆங்கில நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூல் வடநாட்டினரை பிரமிக்க வைக்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது.இதைப் படித்து வட நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திர குஹா அசந்துவிட்டார். இந்த நூல் வெளியிடப்பட்ட பிறகு அனைத்து பத்திரிகைகளிலும், வலைதளங்களிலும் மதிப்புரைகள் வந்துவிட்டன. இது என்னுடைய பெருமை அல்ல; அத்தனை பெருமைகளும் வ.உ.சி.யை சாரும். அந்த அங்கீகாரம் வ.உ.சி.க்கு பெற்றுத் தந்திருப்பது மட்டுமல்லாமல், அதன் மூலம் தமிழர்களுக்கும் பெருமை கிடைத்துள்ளது.

எனவே, வ.உ.சி.யின் புகழை எப்போதும் மறக்கடிக்க முடியாது. அவரது புகழ் இன்னும் ஓங்கும். அதற்கான பணியை நாம் அனைவரும் முன்னெடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரையாற்றினார். முடிவில் பொதுக் குழு உறுப்பினர் கரந்தை கி. ஜெயக்குமார் நன்றி கூறினார்.

பம்பையில் இருந்து தமிழக அரசு பேருந்து இயக்கம் கிளாம்பாக்கம் வந்து சேர்ந்த முதல் பேருந்து

சென்னை, நவ.19

நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனுக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. தந்திரிகள் கண்டரரு ராஜீவரு, பிரம்மதத்தன் முன்னிலையில் மேல்சாந்தி மகேஷ் நம்பூதிரி நடையை திறந்து வைத்து தீபாராதனை நடத்தினார். சபரிமலைக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் பாதுகாப்பான யாத்திரைக்கான ஏற்பாடுகள் மற்றும் வசதிகள், கோவில் நிர்வாகம் மற்றும் கேரள மாநில அரசு சார்பில் செய்யப்பட்டு வருகின்றன.

இதனிடையே, சபரிமலை மண்டல பூஜை, மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு நவம்பர் 15 முதல் ஜனவரி 16ந்தேதி வரை சென்னை கோயம்பேடு, கிளாம்பாக்கம், திருச்சி, மதுரை, புதுச்சேரி, கடலூரில் இருந்து பம்பைக்கு அதிநவீனசொகுசுமிதவை பேருந்துகள், இருக்கை, படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதன வசதி இல்லாத சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சபரிமலை செல்லும் பக்தர்களின் வசதிக்காக இயக்கப்பட்ட தமிழக அரசின் சிறப்பு பேருந்து முதல்முறையாக கிளாம்பாக்கம் வந்தடைந்தது. கடந்த நவம்பர் 15ந்தேதி முதல் கோயம்பேடு, கிளாம்பாக்கத்தில்இருந்து பம்பைக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. பின்னர் பம்பையில் இருந்து இயக்கப்பட்ட முதல் தமிழக அரசு சிறப்பு பேருந்து இன்று கிளாம்பாக்கம் வந்து சேர்ந்தது. பேருந்தில் பயணித்த பக்தர்கள் நிலக்கல் செல்லாமல், நேரடியாக பம்பையில் இருந்து கிளம்புவது வசதியாக உள்ளதாக தெரிவித்தனர்.

தாராபுரத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஊட்டச்சத்து பெட்டகம்

தாராபுரம், நவ.19

தாராபுரத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் மண்டல குழு தலைவருமான இல.பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே எஸ் தனசேகர் நகரச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இதில் மாவட்ட திட்ட அலுவலர் மகாலட்சுமி சங்கீதா வட்டார மண் தோ அலுவலர் தேன்மொழி குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் நினைச்சா நகராட்சி பொறியாளர் சுகந்தி மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் திமுக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

திமுக அரசு தமிழ்நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கிறது ஓ.பன்னீர் செல்வம் கடும் தாக்கு

சென்னை, நவ.19

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பொருளாதாரத்தை மேம்படுத்தப் போகிறோம், அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்கப் போகிறோம்,அரசு காலிப் பணியிடங்களை நிரப்பப் போகிறோம், அரசின் நிதி நிர்வாகத்தை சீர் செய்யப் போகிறோம்;, மக்களுக்கான நலத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லப் போகிறோம் என்றெல்லாம் வாக்குறுதிகளை அள்ளிவீசி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த தி.மு.க. அரசு, அனைத்திலும் படுதோல்வியடைந்து தமிழ்நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கிறது. அம்மா அவர்களின் சிந்தனையில் உருவாக்கப்பட்டதாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், மகளிர் இரு சக்கர மானியம் வழங்கும் திட்டம், மடிக்கணினி வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களை முடக்கிய தி.மு.க. அரசு, தற்போது அரசு தகவல் தொகுப்பு விபரமையம், ஓய்வூதிய இயக்குனரகம், சிறு சேமிப்பு இயக்குனரகம் போன்றவற்றை கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையுடன் இணைத்து, மூன்று துறைகளுக்கு மூடுவிழா நடத்தி அரசாணை பிறப்பித்துள்ளது பொது மக்களிடையே குறிப்பாக அரசு ஊழியர்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தி.மு.க. அரசின் மேற்படி செயல் மூலம், அரசு வேலைவாய்ப்புகள் இனி உருவாக்கப்படமாட்டாது என்பதும், காலிப் பணியிடங்கள் தேவைக்கேற்ப நிரப்பப்படாது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.இதுமட்டுமல்லாமல், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டம் இனி கானல் நீர் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், சமூக நீதிக்கு தி.மு.க. அரசு மூடு விழா நடத்தியுள்ளது. ஒரு வேளை சமூக நீதியை காவு கொடுப்பதுதான் 'திராவிட மாடல்' போலும். தி.மு.க. அரசின் இந்த மக்கள் விரோதச்செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதல்அமைச்சர்அவர்களுக்குஉண்மையிலேயே சமூக நீதியை நிலைநாட்ட வேண்டுமென்ற அக்கறை இருக்குமேயானால், மூன்று துறைகளுக்கு மூடுவிழா நடத்த பிறப்பி அத்துள்ள ஆணையை உடனடியாக திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

'பராரி' படத்தின் 3வது பாடல் ரிலீஸ் தேதி அறிவிப்பு

ஹரிஷங்கர்,சங்கீதாகல்யாண்நடிப்பில்எழில்பெரியவேடி இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'பராரி' . 'குக்கூ', 'ஜோக்கர்', 'ஜிப்ஸி', 'ஜப்பான்' போன்ற பல படங்களை இயக்கிய இயக்குனர் ராஜு முருகன், எஸ்பி சினிமாஸ் நிறுவனத்துடன் இணைந்து இப்படத்தை வழங்குகிறார். இப்படத்தின் இயக்குனர் எழில் பெரியவேடி ராஜு முருகனின் உதவி இயக்குனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்திற்கு ஷேன் ரோல்டன் இசையமைத்துள்ளார். இந்ததிரைப்படத்தைகாலாபிலிம்ஸ்பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பில் நடிகர் ஹரி சங்கர் தயாரித்திருக்கிறார். சமீபத்தில், 'பராரி' திரைப்படத்தின் டீசர் வெளியானது. இந்தடீசரில்ஆதிக்கசாதிஒடுக்கப்பட்டமக்கள்ஆகியோரின் வாழ்வியலின் உணர்வுபூர்வமான காட்சிகள் இடம்பெற்றிருந்ததால் பார்வையாளர்களிடத்தில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்தநிலையில், இப்படத்தின் 'சாம்பவா' பாடலின் ரிலீஸ் தேதியை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படத்தின் 3வது பாடல் நாளை மாலை 5 மணிக்கு வெளியிடப்படுகிறது.

இப்படம் வரும் 22ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகை நயன்தாரா நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் அப்டேட்

டயானா மரியம் குரியன், சினிமாவுக்காக நயன்தாராவாக மாறி தாய் மொழியான மலையாளத்தில்தான் தனது திரைபயணத்தை தொடங்கினார் . தமிழில் சரத்குமார் ஜோடியாக ஐயா படத்தில் அறிமுகமான நயன்தாரா, இரண்டாவது படத்திலேயே ரஜினிகாந்தின் ஜோடியாகி சந்திரமுகி படத்தில் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தி பலரது புருவத்தை உயர வைத்தார். 2018ம் ஆண்டில் போர்ஸ் இதழில் இடம்பிடித்த டாப் 100 லிஸ்டில் இடம்பிடித்த ஒரே தென்னிந்திய நடிகை என்ற பெருமையும் பெற்றார் . இயக்குநர் விக்னேஷ் சிவனும் நடிகை நயன்தாராவும் 2022ல் காதலித்து திருமணம் செய்துக்கொண்டனர். இந்த தம்பதிக்கு உயிர் மற்றும் உலகம் ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

இவர் நடிப்பில் வெளியான அன்னபூரணி படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றதுமில்லாமல் சர்ச்சையிலும் சிக்கியது. தற்போது, டியர் ஸ்டூடண்ட்ஸ், டாக்சிக், தனி ஒருவன் 2, குட் பேட் அக்லி, மூக்குத்தி அம்மன் 2, மகாராணி ஆகிய படங்களில் நடித்து வருகிறார். மண்ணாங்கட்டி, டெஸ்ட் ஆகிய படங்கள் வெளியீட்டுக்கு தயாராகி வருகின்றன. ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலித்த ஜவான் படத்தில் நடித்து இந்தி ரசிகர்கள் மத்தியிலும் பிரபலமானார்.

நடிகை நயன்தாராவின் சிறுவயது வாழ்க்கை முதல் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தது வரை உள்ள சம்பவங்களை தொகுத்து ஒரு ஆவணப்படம் தயாராகி உள்ளது. 'நயன்தாரா: பியாண்ட் தி பேரி டேல்' என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்த ஆவணப்படம்நாளைநெட்பிளிக்ஸ்ஓ.டி.டிதளத்தில்வெளியாகஉள்ளது. சமீபத்தில் இதன்டிரெய்லர்வெளியானது. அதில், தனுஷ் தயாரிப்பில் நயன்தாரா நடிப்பில் வெளியான நானும் ரவுடிதான் திரைப்படத்தின் சிறு காட்சி இடம்பெற்றிருந்தது. இதனால் அந்த வீடியோவுக்கு எதிராக நானும் ரவுடிதான் படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் நடிகர்தனுஷ் ரூ. 10 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டு நயன்தாராவுக்கு நோட்டீஸ் அனுப்பிய இருக்கிறார். இதனையடுத்து, தன்மீதுள்ள தனிப்பட்ட வெறுப்பால் நடிகர் தனுஷ் பழிவாங்குகிறார் என்று நடிகை நயன்தாரா பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார். இது தொடர்பாக நயன்தாரா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிக்கையையும் வெளியிட்டார்.

இந்நிலையில் நயன்தாரா அடுத்து நடித்துள்ள திரைப்படத்தின் டைட்டில் டீசர் வீடியோவை நாளை காலை 10.15 மணிக்கு வெளியிடப்போவதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. போஸ்டரில் நயன்தாரா கையில் உலக்கை வைத்து இருக்க அவருக்கு முன் பெரிய பெரிய ரவுடிகள் இருப்பது போல காட்சிகள் அமைந்துள்ளது.

இப்படத்தை டிரம்ஸ்டிக்ஸ் புரொடக்சன் மற்றும் மூவிவெர்ஸ் இந்தியாதயாரிப்புநிறுவனம் இணைந்துதயாரித்துள்ளது. டிரம்ஸ்டிக்ஸ் புரொடக்சன் இதற்குமுன் இமைக்கா நொடிகள், யானை, திரிஷா இல்லனா நயன்தாரா போன்ற வெற்றி திரைப்படங்களை வெளியிட்டுள்ளது.

வாகன சோதனையின்போது சிக்கிய கஞ்சா: பிரபல நடிகர் கைது

கேரளாவை சேர்ந்த பிரபல நடிகர் பிஎஸ் பரிதுதீன். இவர் மலையாள சினிமா துறையில் சில படங்களில் நடித்துள்ளார். பாடகராகவும் உள்ள இவர் பிக்பாஸ் நிகழ்ச்சியிலும் பங்கேற்று பிரபலமானார்.

இந்நிலையில், இடுக்கி மாவட்டம் புள்ளிக்கன்னம் பகுதியில் போலீசார் வாகனச்சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, அவ்வழியாக வந்த நடிகர் பிஎஸ் பரிதுதீனின் காரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அந்த காரில் கஞ்சா மற்றும் எடிஎம்ஏ என்ற போதைப்பொருள் இருந்தது.

இதையடுத்து, காரில் இருந்த நடிகர் பரிதுதீன் மற்றும் அவரது நண்பரை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

கடைசி டி20 : ஆஸ்திரேலியா பாகிஸ்தான் அணிகள் மோதல்

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ஒருநாள் , 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.இதில், ஒருநாள் கிரிக்கெட்டில்21என்றபுள்ளிகள்கணக்கில்ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.இதையடுத்து, இரு அணிகளுக்கு இடையேயான டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகிறது.முதல்டி20போட்டியில்ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனை தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையேயான 2வது டி20 ஆட்டம் பிரிஸ்பென்னில் நேற்று நடைபெற்றது .இதில் 13 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா திரில் வெற்றிபெற்றது.

இந்தநிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி டி20 போட்டி நாளைநடைபெற உள்ளது. இந்த போட்டியில் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்ற ஆஸ்திரேலியா தீவிரம் காட்டும் . ஆறுதல் வெற்றி பெற பாகிஸ்தான் முனைப்பு காட்டும். இந்திய நேரப்படி மதியம் 1.30 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது.

மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி: இந்திய அணி தொடர்ந்து 5வது வெற்றி பெற்று அசத்தல்

8வது மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நடப்பு சாம்பியன் இந்தியா, ஜப்பான், தென் கொரியா சீனா, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் இந்தியஅணிதான்விளையாடியமுதல் 4 ஆட்டங்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. இதனையடுத்து இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் ஜப்பானுடன் இன்று மோதியது. இதிலும் வெற்றி வேட்கையை தொடர்ந்த இந்தியா 30 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வீழ்த்தி தொடர்ந்து 5வது வெற்றியை பதிவு செய்தது. இந்தியா தரப்பில் தீபிகா 2 கோல்களும், நவ்னீத் கவுர் ஒரு கோலும் அடித்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்திய அணி லீக் சுற்றில் தோல்வியே சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்: இந்திய அணியில் அறிமுகமாகும் ஆல் ரவுண்டர்..?

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்திய வீரர்கள் பெர்த்தில் உள்ள வாகா மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே முதலாவது போட்டி நடைபெறும் பெர்த் ஆடுகளம் முழுக்க முழுக்க வேகப்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் என்று அதன் பராமரிப்பாளர் சமீபத்தில் எச்சரித்திருந்தார். மேலும் பயிற்சியின் போதும் இந்திய வீரர்கள் வேகப்பந்து வீச்சில் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்த முதல் போட்டிக்கான இந்திய அணியில் இளம் வேகப்பந்து வீச்சு ஆல் ரவுண்டரான நிதிஷ் ரெட்டி அறிமுகம் ஆக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அணியின் பேட்டிங் மற்றும் பந்துவீச்சு ஆழத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.